## பிப்ரவரி - 3

**"என் மகனே என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியை சாய்; அவைகளைக் கண்டு பிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும் அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்." - நீதி 4 : 20, 22.**

சரீரத்தின் மேல் மனதிற்குள்ள செல்வாக்கை சிலரே கண்டு கொள்ளுகிறார்கள். பொதுவாக மனம் நல் நடத்தை இவைகளுக்குரிய அமைப்பில், சுத்தமான, மேன்மையான, பரிசுத்தமான எண்ணங்கள் மேன்மைப்படுத்துகிற பயனைக் கொடுப்பதோடல்லாமல் சரீர அமைப்பிலும் திடப்படுத்தும் சக்தி இவைகள் உடையவனவாக இருக்கின்றன. அதற்கு மாறாக ஒவ்வொரு அசுத்தமான இழிவான பரிசுத்தமில்லாத எண்ணமும் கிரியையும் நேரடியாக மனம், நல் நடத்தை இவைகளின் இழிவை உண்டு பண்ணுவதோடல்லாமல், விழுந்துபோன மனித வர்க்கத்தின் உடம்பிலேயும் முன்பே இருக்கிற வியாதியின் விதைகளை முளைக்கச் செய்கின்றன. **- Z '96, 180 (R 2013)**

தமது பிள்ளைகள் தங்களுடைய மனதையும் இருதயத்தையும் தன்னுடைய போதனைகளுக்கு உட்படுத்த தேவன் அவர்களுக்கு புத்தி சொல்லி உற்சாகப்படுத்துகிறார். நாம் அவருடைய வார்தையைக் கற்றுக்கொள்ள அவர் விரும்புகிறார் என்பதில் ஆச்சரியமில்லை. ஏனெனில் தேவனுடைய வார்த்தையின் மூலமாக நித்திய ஜீவனுக்குத் தகுதியாக்கப்படுகிறோம். சுவிசேஷ யுகத்தின் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமல்லாமல், ஆயிர வருஷத்தின் மனுஷருக்கும் தேவனுடைய வார்த்தையின் மூலமாக, நித்திய ஜீவனுக்குத் தகுதியாக்கப்படுகிறோம். சுவிசேஷ யுகத்தின் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமல்லாமல், ஆயிர வருஷ யுகத்தின் மனுஷருக்கும் தேவனுடைய வார்த்தை ஜீவனைக் கொடுக்கும். அதுதான் நித்திய ஜீவனுக்கும் நிரந்தர இளமைக்கும் ஊற்று. அதைக் கண்டுகொண்டு அந்த நீரைக் குடிக்கிறவன், ஸ்பானிய தேசத்தவன், வீணாகத் தேடின அந்த நிரந்தர இளமையையும் ஜீவனையும் உடைய ஊற்றைக் காண்கிறான். **- P '27, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 13:9; உபா 29:29; யோசு 1:8; யோபு 23:12; சங் 12:6; 17:4; 19:7-11:119:9,11-20; நீதி 6:20-23; மத் 7:24-27; லூக் 11:28; யோவா 5:24; 17:17;

**கோபுர வாசிப்பு :** Z '13, 163 (R 5246).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் வசனத்தை நான் தியானம் செய்தேனா? எப்படி? எப்பொழுது? பலன் என்ன?